



● பா.ராகவன்

முகம்மது சலாமி, அமெரிக்க உளவுத்துறை ஆசாமிகளிடம் மாட்டிக்கொண்ட கட்டம் மிகவும் காமெடியானது.

ஒரு தற்காப்புக்காக அவ்வப்போது போன் செய்து, அந்த வாடகை கார் முதலாளியிடம், 'என் காசைத் திருப்பிக்கொடு, திருப்பிக்கொடு' என்று கேட்டுக்கொண்டிருந்தானே தவிர, உண்மையில் அந்த நானூறு டாலரை வைத்துக்கொண்டுதான் அவன் பிழைக்க வேண்டும் என்பதில்லை. ஆனால், அதுவே தனக்கு வினையாகிவிடும் என்று அவன் நிச்சயம் எதிர்பார்க்கவில்லை.

வாடகை கார் முதலாளி, 'சரி வந்து வாங்கிக்கொண்டு போ' என்று சொன்னதும், சலாமிக்கு முதலில் நம்பவே முடியவில்லை. 'என்னடா இது அதிர்ஷ்டதேவதை இப்படிக்கூட கூப்பிட்டுக் காசு கொடுக்குமா' என்றுதான் நினைத்தான். 'சரி, வந்தால் டீ செலவுக்கு ஆச்சு' என்று நினைத்துத்தான், அந்த வாடகை கார் கம்பெனிக்குத் திரும்பவும் போனான்.

அவன் போன நேரத்தில், முதலாளி யாரோ ஒரு கனவானுடன் பேசிக்கொண்டிருந்தார்.

"ஹலோ, என்னை எதற்கு வரச் சொன்னீர்கள்? எங்கே என் நானூறு டாலர்?" என்று கித்தாப்பாகக் கேட்டான் சலாமி.

"நானூறு டாலர்தானே? இதோ, ஒரு நிமிடம்" என்று சொல்லிவிட்டு முதலாளி எஸ்கேப் ஆகிவிட, அவருக்கு எதிரே உட்கார்ந்திருந்த எஃப்.பி.ஐ. அதிகாரி, கோழி அமுக்குவது போல அவனை அமுக்கி, இழுத்துக்கொண்டு போய் ஜீப்பில் ஏற்றினார்.

ஜீப் புறப்பட்ட கணத்திலேயே மண்டகப்படி ஆரம்பமாகிவிட்டது. ஒரு நாலைந்து ரவுண்டு, பேசக்கூட விடாமல் போட்டுச் சாத்திய பிறகு, கொஞ்சம் மூச்சுவிட அவகாசம் கொடுத்து ஒரு வாய் தண்ணீர் கொடுத்தார்கள். 'சரி, பேசு' என்று நெற்றிப்பொட்டில் துப்பாக்கி வைத்தார்கள்.

சலாமி பேச ஆரம்பித்தான்.

அவன் ஒரு பாலஸ்தீனியன். மேற்குக் கரைப் (West Bank) பகுதியில் உள்ள நப்லஸ் என்கிற ஊரைச் சேர்ந்தவன். மிகுந்த மதப்பற்று மிக்க குடும்பத்திலிருந்து வந்தவன். ஓரளவு ஒரு டிகிரி வரை படித்தவனும்கூட. கண்டிப்பாக ரம்ஸி யூசுஃப்பைப் போலவோ, ஏனைய அல் காயிதா ஆசாமிகளைப் போலவோ தீவிர அடிப்படைவாதி அல்ல. மதப்பிரசங்கங்கள் செய்வதில்தான் அவனுக்கு ஆர்வம். "வேண்டுமானால் நான் படித்த ஜோர்டன் பல்கலைக் கழகத்தில், என்னைப் பற்றி விசாரித்துப் பாருங்கள்" என்று அழமாட்டாத குறையாகச் சொன்னான் சலாமி.

அவன் பேசி முடிப்பதற்குள் எஃப்.பி.ஐ. அதிகாரிகள், விஷயத்தை சி.ஐ.ஏ.விடம் சொல்லி, 'அந்தப்

பக்கம் கொஞ்சம் கவனி' என்று கேட்டுக்கொள்ள, ஒரு மணி நேரத்துக்குள்ளாக மேற்குக் கரைப் பகுதிக்கு சி.ஐ.ஏ., உளவாளிகள் போய்ச் சேர்ந்து தோண்டித் துருவ ஆரம்பித்துவிட்டார்கள்.

சலாமி சொன்னதெல்லாம் சரிதான். ஆனால், அவன் சொல்லாமல் விடுத்த விஷயம் ஒன்று உண்டு. அவனது அம்மா வழியில் தாத்தா, தாத்தாவுக்கு அப்பா, அப்பா தாத்தாவுக்குத் தாத்தா, தாத்தாத்தாத்தாத்தாக்கள் என்று ஒரு பெரிய பரம்பரையே, கெரில்லாப் போராளிகளாக இருந்தவர்கள்தான் என்கிற விவரம் தெரியவரவே, சலாமியின் வாக்குமூலத்துக்கு ஒரு சலாம் வைத்து, அவனைக் கொண்டுபோய் உள்ளே தள்ளி, மேலும் தீவிரமாக விசாரிக்க ஆரம்பித்தார்கள். தீவிர விசாரணை என்பதன் இன்னொரு பெயர் அடி பின்னி எடுப்பது.

சரி, இனிமேல் தாங்கமுடியாது என்றொரு நிலை வந்தபோது, அவன் வாயைத் திறந்து சில பெயர்களைச் சொன்னான். நிதால் ஹயாத்,. மம்மூத் அபூஹாலிமா, முஹமது அஜாஸ்.

கவனிக்கவும். ரம்ஸி யூசுஃபின் பெயரை அவன் சொல்லவில்லை. மேற்படி நபர்கள் அத்தனை பேரும், 1993 குண்டு வெடிப்புச் சதியுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டவர்கள்தான். ஆனாலும் சதித் தலைவனைக் காட்டிக்கொடுத்துவிடக் கூடாது என்பது மேலிடத்து உத்தரவு. மேலிடம் என்பது அவனுக்குத் தெரிந்த அளவில் குருட்டு ஷேக்.

ஆனால், அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகளுக்கு இவர்களையெல்லாம் மோப்பம் பிடிக்கும்போதே சின்ன மீன்கள்தான் என்பது தெரிந்துவிட்டது. ஏதோ ஒரு வாளை மீனோ, விலாங்குமீனோ தப்பித்திருக்கிறது என்பதும் புரிந்துவிட்டது. ஆகவே, சலாமியை மேலும் தீவிரமாக விசாரித்தார்கள். விளைவாக, நியூ ஜெர்சி நகரில் ஒரு அபார்ட்மெண்டின் முகவரி அவர்களுக்குக் கிடைத்தது.

போய், கதவை உடைத்துச் சுற்றி வளைத்தபோது அகப்பட்டவன், அந்த வெடிகுண்டு நிபுணன் அப்துல் ரகுமான் யாசின். ஒரு சமர்த்துப் பையன்போல், அவன் அங்கே தன் தாயுடன் தங்கியிருந்தான். கைது செய்யப்போன அதிகாரிகளுக்கு 'இவன் இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருப்பானா' என்றே சந்தேகம் தோன்றுமளவுக்கு அவன் நல்ல பிள்ளை தோற்றம் கொண்டிருந்தான். தவிரவும் பக்திப் பெண்மானான அவனது தாய், வந்த ஆபீஸர்களை உட்காரவைத்து காபியோ சூப்போ வேறு கொடுத்து பணிவுடன் வணங்க, இந்தப் பூனை பால் குடிக்காதோ என்று நினைத்தார்கள். எதற்கும் இருக்கட்டும் என்றுதான் எஃப்.பி.ஐ.யின் நியூ ஜெர்சி நகர அலுவலகத்துக்கு அழைத்துப் போய் இரண்டொரு வார்த்தை பேசினார்கள்.

'குண்டு வெடிப்பா? அப்படின்னா? குண்டுன்னா எப்படி இருக்கும்? உருண்டையாவா? கோளமாவா? என்ன சைஸ் இருக்கும்? ஒரு கோலி குண்டு சைஸ்? இல்ல, ஒரு டூமா கோலி சைஸ்? அது சரி, சார்.. எப்படி இந்த குண்டுங்க வெடிக்குது? தூக்கி செவுத்துல அடிச்சா டமார்னு சப்தம் வருமா?'

இந்த ரேஞ்சுக்கு யாசின், விசாரணை அதிகாரிகளிடம் பேசிய பேச்சுகள், அப்படியே பதிவாகியிருக்கின்றன. நம்ப முடியாத அளவுக்கு நல்லவன் போலத் தெரிந்த யாசினை, அதிகாரிகள் அன்றைக்கு மாலையே வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்.

ஆனால், ஏதோ ஒரு சிறு பொறி தட்டி, மறுநாள் அவர்கள் அவனது அபார்ட்மெண்டுக்குப் போய்ப் பார்த்தபோதுதான், அந்தப் பூனை பாலல்ல; பீரே குடிக்கும் என்கிற உண்மை தெரிந்தது. ஒரே இரவுதான். பட்சி நேரே ஈராக்குக்குப் பறந்துவிட்டது! அந்தத் தாய்ப்பறவையும் உடன் போய்விட்டது. 'சே' என்று தலையில் அடித்துக் கொண்டார்கள் அதிகாரிகள். வெளியே தெரிந்தால் வேலை போய்விடுமோ என்கிற அச்சத்தில் கொஞ்சநாள் இந்த யாசின் விவகாரத்தையே மூடிவைத்துவிட்டார்கள்.

மறுபக்கம், புலனாய்வை இன்னும் துரிதப்படுத்தி, கைது செய்த ஆசாமிகளை மேலும் மேலும் துருவித்துருவி விசாரித்ததில், ஒருவழியாக அவர்களுக்கு ப்ரூக்ளின் ஃபாரூக் மசூதி குறித்த முதல் தகவல் கிடைத்தது!

ஷேக் உமர் அப்துர் ரெஹ்மான் என்கிற குருட்டு ஷேக். அவரா! அவரா! இருக்காது. இருக்கமுடியாது. இந்தப் பயல்கள் விளையாடுகிறார்கள் என்றுதான் முதலில் நினைத்தார்கள் எஃப்.பி.ஐ. அதிகாரிகள். இருப்பினும் அத்தனை பேரையும் சந்தேகப்படு என்கிற அடிப்படை விதியை மனத்தில் கொண்டு, ஃபாரூக் மசூதிக்குப் போய் குருட்டு ஷேக்குடன் உட்கார்ந்து பேசினார்கள்.

“ஐயா, இந்த மாதிரி உங்கள் மேல் சந்தேகப்படச் சொல்லி எங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது. வர்த்தக மையக் கட்டட குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?”

“ஆண்டவனே! எப்பேர்ப்பட்ட சதிச்செயல் அது! அதைச் செய்தவர்கள் ஒருபோதும் நன்றாக இருக்கமாட்டார்கள். அல்லா அவர்களுக்கு உரிய கூலியைக் கொடுப்பான்.”

“அந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட சிலருக்கு உங்களை அறிமுகம் இருக்கிறது போல் தெரிகிறது.”

“அப்படியா? இருக்கலாம். இங்கே எத்தனையோ ஆயிரம் பேர் தொழுகைக்காக வருகிறார்கள். பலபேர் என்னிடம் சொந்தப் பிரச்னைகளையும் சொல்லித் தீர்வு கேட்கிறார்கள். என்னால் முடிந்த உதவிகளை நான் செய்கிறேன். ஆனால் தீர்வு தருவது அல்லா அல்லவா?”

“நீங்கள் தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் தருவதாக..”

“ஆண்டவனே.. நீங்கள் அப்படி நினைத்தால் அது சைத்தானின் சித்தம். ஆண்டவன் சித்தம் என்னவென்றால், நான் அமைதியை மட்டுமே பரப்பவேண்டும் என்பதுதான்.”

“அப்படியென்றால் உங்களுக்கு ஒன்றும் தெரியாதா?”

“அனைத்தும் அறிந்தவன் அல்லா ஒருவன் தான் ஐயா. நானெல்லாம் சிறு துரும்பு. நீங்கள் விரைவில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நான் பிரார்த்தனை செய்வேன். நான் விசாரணைக்கு வரவேண்டும் என்று நினைப்பீர்களானாலும் வருகிறேன். என்னால் முடிந்த அத்தனை உதவிகளையும் உங்களுக்குச் செய்வேன். நானும் அமெரிக்க மண்ணில் வசிப்பவன்தான். இங்கே அரசு எனக்கு எந்தக் குறையும் வைக்காமல் நன்றாகப் பார்த்துக்கொள்கிறது. எனது மதப்பணிகளை ஒழுங்காகச் செய்யமுடிகிறது. எனவே, உங்களுக்கு உதவுவது என் கடமையாகிறது. சொல்லுங்கள், நான் என்ன செய்யவேண்டும்?”

இதற்குமேல் அதிகாரிகளால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவரை எஃப்.பி.ஐ. அலுவலகத்துக்கு மட்டும் அழைத்துப் போய் ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதி வாங்கிக்கொண்டு விட்டுவிட்டார்கள். ஷேக் சாஹேப் சௌக்கியமாக மீண்டும் அதே ஃபாரூக் மசூதிக்கு வந்து வேலையைப் பார்க்க ஆரம்பித்துவிட்டார். ஓடி ஒளிந்தால்தானே சந்தேகமெல்லாம்? அந்த வயதுக்கு அவரது மூளை இயங்கிய வேகத்தை விவரிக்கவே முடியாது. அப்படியொரு குயுக்தி பிடித்த ஆசாமி அவர்.

அது ஒருபுறமிருக்க, அதிகாரிகள் மேலும் மேலும் விசாரணை, புலனாய்வு என்று தோண்டித் துருவி அலைந்ததில் ஒருவழியாக ரம்ஸி யூசூஃபின் அபார்ட்மெண்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இதற்கு உதவியதும் சலாமிதான். அவன் வாங்கிய அடிகள் அப்படிப்பட்டவை. தாக்குப் பிடிக்கவே முடியாத ஒரு சூழலில்தான், அவன் யூசூஃபின் முகவரியைக் கொடுத்தான்.

போய்ப் பார்த்த அதிகாரிகளுக்கு வியப்பும் அதிர்ச்சியும் தாளவில்லை. வெறும் வீடா அது! ஒரு தீவிரவாதச் சுரங்கமாக இருந்தது. ஒரு பக்கம் வரைபடங்கள், திட்டக் குறிப்புகள், ஏகப்பட்ட தொலைபேசி எண்கள் அடங்கிய காகிதங்கள். இன்னொரு பக்கம், குண்டு தயாரிப்புக்கான மூலப் பொருள்களின் மிச்சம், மாடல் குண்டு, ஃப்யூஸ் ஒயர்கள், ரிமோட் கண்ட்ரோல் கருவிகள், கைத்துப்பாக்கி ஒன்று, எல்லாவற்றுக்கும் மேலாக முஹம்மது ஜமால் காலிஃபா என்கிற பெரிய மனுஷன் ஒருத்தரது விசிட்டிங் கார்டு! உயிர்தப்பி பாகிஸ்தான் போனால்போதும் என்று பாய்ந்து ஓடியவன், இவற்றையெல்லாம் அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டான்.

அனைத்தையும் அள்ளி எடுத்துக்கொண்டு ஆபீஸுக்குப் போனார்கள் அதிகாரிகள். உட்கார்ந்து நிதானமாக ஒவ்வொன்றாக அலசிவிட்டுக் கடைசியாக, அந்த விசிட்டிங் கார்டைப் பார்த்தார்கள். அந்தக் குறிப்பிட்ட நபர் யார் என்று தேடத் தொடங்கி, ஒருவழியாகக் கண்டுபிடித்தபோதுதான் அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகளுக்குப் பூங்கதவு தாழ் திறந்தது.

அந்த விசிட்டிங் கார்டில் இருந்த போன் நம்பருக்கு முதலில் சும்மா ஒரு போன் போட்டார்கள். அது உண்மையான கார்டுதான் என்பதை ஊர்ஜிதப் படுத்திக் கொள்வதற்காக.

பிறகு, அந்த கார்டில் உள்ள நபர் யார், என்ன செய்கிறார் என்று விசாரித்தார்கள். சவூதி அரேபியாவைச் சேர்ந்த முஹம்மது ஜமால் காலிஃபா ஒரு பெரிய பிசினஸ்மேன் என்கிற விவரம் கிடைத்தது. என்ன பிசினஸ் என்று விசாரித்தபோது, ஏகப்பட்ட பிசினஸ்களில் அவர் சம்பந்தப்பட்டிருப்பது தெரிந்தது. குறிப்பாகக் கட்டுமான பிசினஸ். ஜெத்தா நகரில் தலைமை அலுவலகத்தை வைத்துக்கொண்டு, சவூதி முழுவதிலும் அவர் தம் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டிருந்தார்.

தவிரவும், தொழில் நிமித்தம் அவர் அடிக்கடி ஆப்கனிஸ்தானுக்கும் சூடானுக்கும் போய் வருபவர் என்கிற விஷயத்தையும், சவூதி அரசு ஊழியர்கள் சிலர் உதவியுடன் சி.ஐ.ஏ தெரிந்துகொண்டது.

அடக் கடவுளே! ஆப்கனிஸ்தானில் என்ன தொழில் செய்யமுடியும், அபின் பயிரிடுவது தவிர? சூடான்? சூரிய மின்சாரம்தான் எடுக்கமுடியும். ஒன்றும் சரியாகப்படவில்லையே? சரி, பார்ட்டியின் குடும்பம் எப்படிப்பட்டது? பெற்றோர், மனைவி, மக்கள் யார்?

இப்படி விசாரணையைத் திருப்பியபோதுதான், அந்தத் தகவல் கிடைத்தது. மதிப்புக்குரிய முஹம்மது ஜமால் காலிஃபாவின் மனைவி, ஒசாமா பின்லேடனின் தங்கை.

முஹம்மது ஜமால் காலிஃபாவுக்கு இன்னொரு பெயரும் உண்டு. அபூ பாரா (Abu Barra).

அடங்கொக்கமக்கா என்று துள்ளி எழுந்தது எஃப்.பி.ஐ.!